


# மராத்திய மாநிலத் தமிழ் எழுத்தாளர் மன்றம்

## TAMIL WRITERS FOUNDATION - MAHARASHTRA (RETD)

மராத்திய மாநிலத் தமிழ் எழுத்தாளர் மன்றம்

25 ஆம் ஆண்டு

2000 – 2025

வெள்ளி விழா

# வெள்ளிவிழா ஆண்டு மாநாட்டு மலர்

நூல் தலைப்பு :

**வெள்ளி விழா மாநாட்டு மலர் 2025**

**Silver Jublee Conference Malar 2025**


இதழ் ஆசிரியர் :
**முனைவர். வதிலை பிரதாபன்**

வடிவமைப்பு :
**எம்.சுரேஷ், அமீத், ஞானம்.**

பதிப்பு : Feb. 2025



இந்தப் புத்தகத்தின் படைப்புரிமம் மராத்திய மாநிலத் தமிழ் எழுத்தாளர் மன்றத்தைச் சேர்ந்ததாகும். இந்தப் புத்தகத்தை மன்றத்தின் எழுத்துபூர்வமான முன் அனுமதி பெறாமல், பயன்படுத்துவது (புத்தக விமரிசனம் தவிர) இந்தியப் படைப்புரிமை சட்டப்படி பெருங்குற்றமாகும்.



**Book Designed and Printed by**
**SP. ANNAMALAI**
**on Behalf of**

**YA PUBLICATIONS**
3/PC-17, Mogappair West Main Road, Above Shanghai Dhaba, Mogappair West, Chennai -37.
**98409 96745**


வெள்ளிவிழா ஆண்டு மாநாட்டு மலர்

# உள்ளே...


| | |
|---|---|
| வாழ்த்துக் கடிதங்கள் | 04 |
| மன்றம் கடந்து வந்த பாதை | 44 |
| மாநாட்டுச் சிறப்பம்சங்கள் | 52 |
| சிறப்புக் கட்டுரைகள் | 64 |
| கவிதைப் பக்கங்கள் | 108 |
| சிறுகதைகள் | 132 |
| சினிமா ஆய்வு | 146 |
| நாலடியார் ஆய்வு | 152 |
| உடல் நலம் பேணுதல் | 160 |
| இல்லறம் | 164 |
| மன்றச் செயல்பாடுகள் - ஆல்பம் | 167 |



## நன்றி!


மராத்திய மாநில தமிழ் எழுத்தாளர் மன்றத்தின் இந்த வெள்ளி விழா மாநாட்டு மலர் சிறப்பாக வெளிவர பின்பலமாக இருந்த விளம்பரதாரர்கள் அனைவருக்கும் எங்கள் நெஞ்சார்ந்த நன்றி!

# கருத்தரங்கம்

(நண்பகல் 12. லிருந்து 1 மணி வரை)

கருத்தரங்கத் தலைவர்

## தொல்காப்பியத்தில் நம் நெஞ்சைக் கவர்வது எது?



முனைவர்
மு.பாலசுப்பிரமணியன் (மு.பா)
ஸ்ரீ பாரதி கலை மற்றும்
அறிவியல் மகளிர் கல்லூரி,
புதுக்கோட்டை, தமிழ்நாடு.

அறிவியல்
சிந்தனையே!



முனைவர் ச.பிரியா
கருத்துரைஞர், தமிழ்
எழுத்தாளர் மன்றம்
பேராசிரியர் - வேல்ஸ்
பல்கலைக்கழகம்
சென்னை

அறவியல்
சிந்தனையே!



நற்றமிழ் நாவலர்
செல்வி ராஜ்
கருத்துரைஞர், தமிழ்
எழுத்தாளர் மன்றம்
செயலாளர் கார்கர்
தமிழ்ச் சங்கம் மும்பை

அகப்பொருள்
சிந்தனையே!



முனைவர் கு.நாகம்மாள்
கருத்துரைஞர், தமிழ்
எழுத்தாளர் மன்றம்
பேராசிரியர் - எஸ்.ஆர்.எம்.
பல்கலைக்கழகம் சென்னை

புறப்பொருள்
சிந்தனையே!



வழக்கறிஞர் சாக்ரடீசு
கணேசன்
சட்ட ஆலோசகர், தமிழ்
எழுத்தாளர் மன்றம்
உயர்நீதி மன்ற
வழக்கறிஞர், மும்பை

கவியரங்கத் தலைவர்

# கவியரங்கம்


## தித்திக்கும் பொங்கல்



"ஏரிக்கரைப் பூங்காத்தே" புகழ்
புலவர் சிதம்பரநாதன்
திரைப்படக் கதை மற்றும்
பாடலாசிரியர், சென்னை



கவிமாமணி
இரஜகை நிலவன்
துணைத்தலைவர்




கவிஞர் அரியக்குடி
மெய்யப்பன்
புரவலர்



பாவரசு முகவை
திருநாதன்
ஆலோசகர்



பாவலர் நொச்சிப்
பூந்தளிரன்
சந்தக்கவிஞர் -
அரூர், தர்மபுரி



முனைவர் சு.பாஸ்கர்
கருத்துரைஞர் -
தஞ்சாவூர்



முனைவர் கி.துர்காதேவி
கருத்துரைஞர், VISTAS
சென்னை



கவிஞர் கதிர்பாரதி
கிருஷ்ணகிரி



முனைவர் தே.தேன்மொழி
கருத்துரைஞர், VISTAS
சென்னை



முனைவர் அ.ரேவதி
கருத்துரைஞர்,
சென்னை



முனைவர் நா.தனலட்சுமி
கருத்துரைஞர், SDNBVC
சென்னை



முனைவர் ஜி.வி.பரமசிவம்
மேனாள் DGM - IDBI Bank
சென்னை



கவிஞர் வெங்கட்
சுப்ரமணியன்
நிருவாகக்குழுத் துணைப்
பொருளாளர்



கவிஞர் கனிஸ்டா ரூபன்
மன்றக் கவிஞர்



முனைவர் சு.சாந்தி
கருத்துரைஞர், VISTAS
சென்னை



முனைவர் யு.துர்காதேவி
கருத்துரைஞர், VISTAS
சென்னை



முனைவர் ம. இராணி
Nazareth College of Arts and
Science College, Chennai



கவிஞர்
செ.இரா.நர்மதாதேவி
கவிஞர், சென்னை

# வெள்ளிவிழா மாநாட்டு விருதுகள்

திருக்குறள் விருது



புலவர் சிதம்பரநாதன்
திரைப்படப் பாடலாசிரியர்,
சென்னை

சிந்தனைச் சிற்பி சிங்கார வேலன் விருது




கவிஞர் நா.முத்துநிலவன்
மாநிலத் துணைத் தலைவர் -
தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்கம்

இளங்கோவடிகள் விருது



முனைவர் க.முருகேசன்
பேராசிரியர், கொங்குநாடு
கலை அறிவியல் கல்லூரி,
கோவை

வெள்ளி நிலா விருது



முனைவர்
மு.பாலசுப்ரமணியன்
மலர்க்குழுத் தலைவர்

வெள்ளி நிலா விருது



வழக்கறிஞர் சாக்ரடீசு
கணேசன்
ஒருங்கிணைப்பாளர் -
விழாக்குழு

வெள்ளி நிலா விருது



கவிஞர் சேதுமணி அனந்தா
துணை ஒருங்கிணைப்பாளர்
- விழாக்குழு

வெள்ளி நிலா விருது



திரு.ஞானம் (மதுரை)
துணை
ஒருங்கிணைப்பாளர் -
விழாக்குழு

வெள்ளி நிலா விருது



திரு.சிவக்குமார்
சுந்தர்ராஜ்
துணை
ஒருங்கிணைப்பாளர் -
விழாக்குழு

## கட்டுரையாளர்களுக்கான விருதுகள்

அகநானூறு விருது




கவிஞர் அரியக்குடி
மெய்யப்பன்

நற்றிணை விருது



முனைவர் கி. துர்காதேவி

குறுந்தொகை விருது



முனைவர் சு.பாஸ்கர்

ஐங்குறு நூறு விருது



முனைவர் பன்னிருகை
வடிவேலன்

பதிற்றுப் பத்து விருது



முனைவர்
செ.மார்கண்டன்

பரிபாடல் விருது



முனைவர்
தே.தேன்மொழி

கலித்தொகை விருது



முனைவர்
யு.துர்காதேவி

திருமுருகாற்றுப்படை
விருது



முனைவர் சு.சாந்தி

பெரும் பாணாற்றுப்படை
விருது



முனைவர்
கு.நாகம்மாள்

குறிஞ்சிப்பாட்டு
விருது



கவிஞர் பிரவினா
சேகர்

மலைபடுகடாம்
விருது



முனைவர் நா.தீபா
ராணி

தொல்காப்பியத்
துளிகள் விருது



முனைவர் ச.பிரியா

முப்பால் விருது



முனைவர்
நா.தனலெட்சுமி



# 9 பரிபாடலில் ஒரு தேடல்

முனைவர் தே.தேன்மொழி
உதவிப் பேராசிரியர், வேல்ஸ் பல்கலைக்கழகம்,சென்னை.

## முன்னுரை :

பரிபாடலில் திருமாலின் இயல்பு, பெருமை, முருகனின் இயல்பு பெருமை, வீரம். வையையாற்றின் தன்மை, பாடல்களில் புனலாடும் தலைவன் தலைவியின் உணர்வுகள், இசை, நாட்டியம், ஓவியம் போன்ற கலைகள் மூலம் அக்கால மக்களின் வழிபாடு, வாழ்க்கை முறை போன்றவை இயற்றமிழ், இசைத்தமிழ் மூலம் விளக்கப்பட்டுள்ளது. அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கில் இன்பத்தையே பொருளாகக் கொண்டு இறைவனை வணங்கி வாழ்ந்தனர்.

இறை வழிபாட்டில் பெண்கள் மட்டுமன்றி ஆண்களும் இடம் பெற்றிருந்தனர். தலைவன், தலைவியிடையே ஏற்படும் ஊடலைத் தீர்க்கும் வாயிலாகவும் தலைவன், தலைவியின் காதல் உணர்வுகளை வெளிப்படுத்துவதற்கான கருவியாகவும் வையை ஆறு விளங்குகிறது. பரிபாடல்களில் இடம்பெற்ற தலைவனின் நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை என்னும் எண்வகை மெய்ப்பாட்டு உணர்வு கொண்டவர்களாகத் திகழ்ந்ததை வெளிக்கொணர்வதை இக்கட்டுரையின் தேடலாகக் கொண்டு அமைகிறது.

## வையை ஆறு :

காமத்தையும் கள்ளையும் ஒன்றாகக் கலந்து தரும் மகளிர் யாவரும் பாராட்டத் தாம் விரும்பிய காதலரொடு புனல் ஆடுமாறு, முன்பிரிந்த அக்காதலரைக் கொண்டுவந்து கூட்டுதல் பூக்கள் நிறைந்த வையையாற்றின் இயல்பு. இதனை,

நாமமர் ஊடலும் நட்பும் தணப்பும்
காமமும் கள்ளும் கலந்துடன் பாராட்டத்
தாம்அமர் காதலரொடு ஆடப்புணர்வித்தல்
பூமலி வையைக்கு இயல்பு
(பரி. 20:108:111, ப. 266)

என்ற பாடல் வரிகள் விளக்குகின்றன.

## உவகை :

தலைவன்-தலைவி இருவர்க்கிடையே ஊடல் அதிகரிக்கும்பொழுது அதனைத் தீர்க்கும் வாயிலாக, வையையாறு இடம்பெற்றுள்ளது. மயிலின் சாயலை ஒத்த தலைவியை எண்ணிக் கொண்டிருக்கும் தலைவனை, தலைவி வேறொரு பெண்ணை எண்ணிக் கொண்டிருக்கிறான் என ஊடல் கொண்டு 'உன் உள்ளக் கருத்தை ஒளிவு மறைவு இன்றி உரைப்பாயாக' எனக் கேட்டாள். அதற்குத் தலைவன்.


நின்இயல் களவெண்ணிக் களிமகிழ் பேதுற்ற
இதனைக்கண்டு யான்நோக்க, நீ எம்மை
(பரி: 18:1113,1. 242)

என்று தெளிவாகக் கூறித் தலைவியின் ஊடலைப் போக்குகிறான். இத்தகு தலைவனின் உள்ளம் தலைவியின் ஊடலைப் போக்கும் தன்மை பரிபாடலில் நிறைந்து காணப்படுகிறது. தலைவியின் ஊடலைத் தணித்து அவளுடன் சேர்ந்து இன்புறும், 'உவகை' மெய்ப்பாடு உணர்வினனாகத் தலைவன் திகழ்கிறான்.

## அசைவு :

தலைவனிடம் ஊடல் கொண்டிருந்த தலைவியின் ஊடலைப் போக்கத் தோழியின் உதவியை நாடுகிறான்.





தோழியிடம்,

யார் பிரிய, யார்வர, யார்வினவ,
யார் செப்பு. நீர்உரைசெய் நீர்மையில் சூள்என்றி (பரி. 8:7272, ப. 129)

என்று தன்மனம் இருதலைப்புள்ளின் ஓர் உயிர்போல வாழும் என்னிடம் பிரிவும் வருகையும் வினாவும் விடையும் எவ்வாறு நிகழும் என்பதை எண்ணிப் பார்க்காமல் தான் கூறியதைப் பொய் என இகழ்கிறாய், இதனை உண்மை என்று எண்ணி பொய்ச்சூள் என்று துணிந்து இறைவன் தன்னை வருத்துவதற்கு முன், அவன் சினத்தைத் தணித்து தன் உண்மைத் தன்மையை உள்ளப் போராட்டத்தை இறைவ:னுக்கு உணர்த்துமாறு தோழியிடம் தன்னிலை தாழ்ந்து இரந்து வேண்டுகிறான். இதனை,

இடுதுனி கையறா என்துயர் கூரச் சுடும்
இறை ஆற்றிசின்; அடிசேர்ந்து சாற்றுமின் (பரி. 8:7879, ப.129)

என்று கூறுவதில் தலைவன் 'அசைவு' என்னும் மெய்ப்பாட்டுணர்வினனாகக் காணப்படுகிறான்.

## முடிவுரை :

இங்ஙனம் பரிபாடலில் தலைவன் பரத்தையருடன் சேர்ந்து புனலாடும் உணர்வினராகவும், அதனால் ஏற்படும் தலைவியுடனான ஊடலைத் தணிக்க வையையாறு, பரங்குன்றம் போன்றவற்றை வாயிலாகப் பயன்படுத்தித் தலைவியுடன் சேர்ந்து வாழத் துடிக்கும் மனஉணர்வினராகவும், தலைவியின் ஊடலைப் போக்கும் உணர்வினராகவும், தலைவியின் காலில் விழவும் தயங்காதவராகவும் காணப்படுகின்றனர்.

பரத்தையரிடம் சென்றாலும் தலைவியை நாடி வரும் இயல்பு கொண்டு மகனுடன் சேர்ந்து வாழத்துடிக்கும் உணர்வினராகக் காணப்படுகின்றனர். நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை என்னும் எண்வகை மெய்ப்பாட்டு உணர்வுகளை வெளிப்படுத்துபவராகவும் காணப்படுகின்றனர்.